REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 9உ திங்கள் (25—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 10உ செவ்வாய் (26—10—54) [இதழ் 114

அறிவில் சிறந்தவன் தமிழன்

டாக்டர் லோகியா கூறும் உண்மை!

இந்தியாவில் உள்ள மக்களில் எல்லாம், அறிவுத் துறையில் சிறந்து விளங்குபவர்கள் தமிழர்களே என்று, பி.-சோ. கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா குறிப்பிட்டிருக்கிறார்.

நிருபர் ஒருவருக்களித்த பேட்டியின்போது அவர் "தமிழர்தம் அறிவு இந்தியாவிலேயே தலைசிறந்தது," என்று பாராட்டியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

கதர் உண்டி வாங்குமாறு கட்டாயம்

அதிகாரிகளுக்கு உ. பி. சர்க்கார் சுற்றறிக்கை

லக்னோ சர்க்கார் ஊழியர் சங்கத்தின் எதிர்ப்பு!

ஆளும் காங்கிரஸ் கட்சியினரின் அரசியல் அநாகரீகம்!

லக்னோ, அக். 25—

'கதர் உண்டிகள்' விற்பனை செய்வதில், உத்திர பிரதேச சர்க்கார், 'உண்டி'களை வாங்கவேண்டுமென்று சர்க்கார் ஊழியர்களைக் கட்டாயப்படுத்துகிறார்களாம்.

சர்க்கார் அதிகாரிகள் அனைவரும் தங்களின் சம்பள விகிதத்திற்கு ஏற்ப கதர் உண்டிகளை வாங்கவேண்டுமென்று அரைகுறை அதிகாரபூர்வமான சுற்றறிக்கை ஒன்று அனுப்ப லக்னோ சர்க்கார் முடிவு செய்துள்ளார்களாம்.

'கதர் உண்டி' என்பது, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு கதர்த் துணிகளை வாங்குவதாக உறுதியளித்து, அதற்கான தொகையை முன்கூட்டியே செலுத்திப் பெறும் அத்தாட்சியாகும்.

காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சியின் சின்னமெனக் கருதும் கதரைப் பரப்ப பொது மக்களின் வரிப்பணத்தை ஏராளமாகச் செலவழிப்பதும், கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதும் தவறு—அரசியல் பண்புகளுக்குப் புறம்பானது என்பதையும் மறந்து, இப்போது சர்க்கார் அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தும் அளவிற்குத் துணிந்துவிட்டனர் என்று தெரிகிறது.

லக்னோ சர்க்கார் அனுப்பியுள்ளதாகக் கூறப்படும் அந்த சுற்றறிக்கையில் ஒவ்வொரு சர்க்கார் உத்தியோகஸ்தரும் குறைந்த பட்சம் இவ்வளவு ரூபாய்க்கு 'கதர் உண்டி'கள் வாங்க வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

பிரதம காரியதரிசி, நிதி இலாக்கா காரியதரிசி ஆகியோர் ரூ. 250; காரியதரிசிகள் ரூ. 150; துணைக் காரியதரிசிகள் ரூ. 75; உதவிக் காரியதரிசிகள், அலுவலக மேற்பார்வையாளர்கள் ஆகியோர் ரூ. 50; குமாஸ்தாக்கள் முதலியோர் தங்கள் தங்கள் தரத்திற்குத் தக்கவாறு ரூ. 6 முதல் ரூ. 10 வரை-இப்படியாக கதர் உண்டி வாங்குவதற்கு குறைந்தபட்ச விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம்!

இதன் மூலம் லக்னோ சர்க்கார் அலுவலகத்தில் ரூ. 5 லட்சத்திற்குக் கதர் உண்டி விற்பனை செய்யத் திட்டமிட்டார்களாம்; இந்த முயற்சி நடைபெறவில்லை என்று தெரிகிறது.

'கதர் உண்டி'கள் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தும் போக்கை அதிகாரிகள் எதிர்க்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

'யார் இந்த முடிவைச் செய்தது?'—என்று அனைவரும் கோபத்துடன் கேட்கிறார்களாம்.

அமைச்சராலய ஊழியர்கள் சங்கத்தின் லக்னோ கிளைக் கழகம், தனது கூட்டத்தில், இந்தக் கட்டாய முறையை எதிர்த்தனர் என்றும், 'கதர் உண்டி', வாங்கவேண்டுமெனக் கட்டாயப்படுத்தும் கதர் ஊக்கமுள்ள அதிகாரிகளின் அளவுக்கு மீறிய ஆர்வத்தை மேற்படி கழகத்தினர் வெளிப்படையாகவே கண்டித்தார்களென்றும கூறப்படுகிறது.

இனமாகவே தங்களுக்கு கதர் ஆடைகள் அளிக்கப்படும் போது 'கதர் உண்டி' வாங்குமாறு கட்டாயப்படுத்துவது நியாயமற்றது என 'பியூன்'கள் கோரினார்களாம்; இது கண்டு சர்க்கார், 'பியூன்'களுக்கு விலக்களித்திருக்கிறார்களாம்!

உ. பி. சர்க்காரின் இந்த கட்டாயப் பிரசாரப் போக்கைப் பலர் நேரடியாகவே கண்டிக்கின்றனர் என்று தெரிகிறது.

ரபி அகமத் கித்வாய் இயற்கை எய்தினார்

புதுடில்லி, அக். 25—

இந்திய அரசாங்க உணவு, விவசாய இலாக்கா மந்திரியான திரு. ரபி அகமத் கித்வாய், நேற்றிரவு சுமார் 8-15 மணிக்கு தமதில்லத்தில் மாரடைப்பினால் காலமானார்.

பழைய டில்லியில், காங்கிரஸ் நகரசபைத் தேர்தலுக்காக காங்கிரஸ் கட்சிப் பொதுக்கூட்டமொன்றில் பேசிவிட்டுத் திரும்பிய சில நிமிடங்களில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது.

அன்று காலையில் அவரது உடல் நிலையைப் பரிசோதித்திருந்த டாக்டர்கள், மாலை பொதுக்கூட்டத்தில் பேசவேண்டாமென்று கூறியிருந்தார்களாம். அதையும் மறுத்து மாலையில், சில நிமிட நேரம் மட்டுமே, வெகு சிரமத்துடன் பேசிவிட்டு இல்லம் திரும்பியிருக்கிறார்.

கித்வாய் இயற்கை எய்திய சோகச் செய்தி, சீனாவில் உள்ள பிரதமர் பண்டிதருக்கு தந்திமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

குடும்பத்தைக் குலைக்கும் இலங்கை சர்க்கார் கோணல் போக்கு!

இலங்கை தமிழரின் துயரம் தொடர்கிறது

சாதாரண காரணங்களுக்காகக் குடிஉரிமை மனுக்களை நிராகரிப்பதுடன், கணவனை இலங்கையில் விட்டுவிட்டு மனைவியை வெளியேறச் சொல்வதும்; மனைவி, குழந்தைகள் ஆகியோரை விட்டு கணவனை வெளியேறச் சொல்வதும் போன்ற செயல்களில் இலங்கை சர்க்கார் ஈடுபட்டு, தமிழர்களின் குடும்ப வாழ்வை சிதைக்க முனைகின்றனர் என்று தெரிகிறது.

இலங்கைவாழ் இந்தியர்களுக்கு வெளியேற்ற உத்தரவுகள் அளிக்கும் பிரச்சினையில் இலங்கை அதிகாரிகள் பொறுப்பற்று நடந்துகொள்கிறார்கள் என்று புகார் கூறப்படுகிறது.

குடி உரிமை பெற மனுச் செய்துகொண்டு அதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூட கவனிக்காமல் வெளியேற்ற உத்தரவுகள் கொடுக்கிறார்கள் என்று இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவர் கூறினார். இது சம்பந்தமாக அவர் சில விபரங்களையும் தெரிவித்திருக்கிறார்.

கணவனையும், குழந்தைகளையும் விட்டுவிட்டு, மனைவிக்கு மட்டும் நோட்டீஸ் கொடுக்கப்படுவதாகவும், மனைவியையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு கணவனுக்கு மட்டும் நோட்டீஸ் கொடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஹட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த கினாவர்டன் தோட்டத்தில் வேலை செய்யும் பழனியாண்டி என்பவர், குடிஉரிமைக்காக மனுச் செய்து கொண்டிருக்கிறார். அவர் டிசம்பர் 15-ந் தேதிக்குள் இலங்கையைவிட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். அவரது மனைவியும், குழந்தைகளும் இலங்கையிலேயே பிறந்து அங்கேயே வாழ்பவர்கள்; இவர்களை விட்டு இப்போது பழனியாண்டி வெளியேறவேண்டியுள்ளது.

இதேபோல், கொழும்பு கிராண்ட் பாசில், கணவனையும், குழந்தைகளையும் விட்டுவிட்டு சோலையம்பாள் என்ற பெண்ணை வெளியேறுமாறு உத்தரவு அனுப்பியிருக்கிறார்களாம்.

இதுபோல், இலங்கையில் பிறந்து வளர்ந்து மணம் செய்துகொண்ட சொக்கம்மாள் என்ற பெண்ணின் குடிஉரிமை மனு நிராகரிக்கப்பட்டதாம். இப்பெண் இந்தியாவுக்கே சென்றதில்லை என்றும், இந்தியாவில் உறவினர் யாரும் கிடையாது என்றும் சொல்லப்படுகிறது.

தன்னுடைய பிறந்த தேதியை குடி உரிமை மனுவில் தவறாகக்குறித்திருந்ததால், நாகம்மாளின் குடி உரிமை மனுவை இலங்கை அதிகாரிகள் நிராகரித்தார்களாம்!

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது இரண்டு வாரகால இலங்கைச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு 28—10—54 காலை 10-45 மணிக்கு 'ஏர் சிலோன்' விமானத்தில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேர்வார்.

பட்டாக் கத்தி தந்த கரம் பட்டாசுகளைத் தருவதா?

கருணாநிதி கேள்வி!

"'போர்க்களத்திலே மரணமுற்றான் உனது தகப்பன்; உனது மாமனும் போரிலே செத்துமடிந்தான். இதோ, இந்தப்பட்டாக் கத்தியைத் தருகிறேன்—செருமுனைக்குச் செல்—மாற்றான் முன் மண்டியிடாதே; நீ இறந்துவிட்டால், உனக்குப் பின் நானும் வருகிறேன்' என்று சொல்லி, ஒரு அன்னை, 7-வயதுகூட நிரம்பப்பெறாத பாலகனிடம் கூறுகிறாள்; பட்டாக் கத்தியைக் கொடுத்து, அவன் தலையிலே எண்ணெய்த் தேய்த்து அனுப்புகிறாள்—புறநானூற்றுக் காலத்துத் தாய்! நாளைக் காலையிலும்தான் நம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் தலையிலே எண்ணெய் தேய்க்கப் போகிறார்கள் — அவர்கள் கைகளிலே 'பட்டாக் கத்தி' கொடுக்கப் போவதில்லை—பதிலாக, 'பட்டாசு' கொடுக்கப்போகிறார்கள்; அந்த நேரத்திலே அவர்கள், இப்போது நான் கூறியவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, 'சரி, இன்றொரு தடவை மட்டும் போகட்டும்; இனிமேல் இப்படிச் செய்வதில்லை,' என்று வாக்குறுதி எடுத்துக் கொள்ளட்டும்; சமுதாயத்திலே, இதுபோன்ற புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட வேண்டும்; நம்மை நாமே இழிநிலைக்கு ஆளாக்கிக் கொள்ளும் தன்மை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும்."

—மு. கருணாநிதி

★

"இந்துமதக் கடவுள்களின் வெட்கக்கேடான கதைகளையும், அந்தக் கதைகளிலே காணக்கிடக்கும் ஆபாசச் செய்கைகளையும் எடுத்துக் காட்டி, சமுதாயத் துறையிலே மக்கள், ஒரு நல்ல முன்னேற்றம்—நாட்டுக்குத் தற்போது தேவையான அரசியல், பொருளாதார முன்னேற்றம்—காண வேண்டுமானால், முதன் முதலாகச் சமுதாயத்திலே காணப்படும் ஊழல்களை—சாதி வேறுபாடுகளை—சாதிப் பாகுபாடுகளை உண்டுபண்ணிய சமயக் கொள்கைகளை விட்டொழிந்தால்தான் முடியும்."

—கி. மனோகரன்

—இவ்வாறு சென்னை சேத்துப்பட்டு வ. உ. சி. மன்றத்தின் 6-வது ஆண்டுவிழா 24—10—54-ல் நடைபெற்றபோது குறிப்பிட்டப்பட்டது.

(விவரம் 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர். அண்ணாதுரை

சென்னை 25—10—1954 திங்கள்

ஒரு பெரும் புதிர்?

சென்ற 250 ஆண்டுகளாக இந்தியத் துணைக் கண்டத்தில், திராவிடத் திருநாட்டுப் பகுதியில் கொட்டம் அடித்துக் கொண்டிருந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியம், இத்திங்கள் 31-ந் தேதியோடு தொலைகிறது. பிரெஞ்சு ஏகாதிபத்திய வரலாற்றில் ஒரு கட்டம் முடிவாகிறது.

தனது கடையைக் கட்டிக் கொள்ளும்படி, பிரெஞ்சிந்தியாவில் உள்ள பொதுஜனப் 'பிரதிநிதிகள்', பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குக் கட்டளை பிறப்பித்துவிட்டார்கள். தனது அரசியல் சட்டத்தில் அத்தகைய வாக்கெடுப்பின்மீதுதான் தனது பிடியில் உள்ள ஒரு குடியேற்ற நாட்டுக்கு விடுதலை வழங்க வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதாக சட்டம் பேசி, வாக்கெடுப்பை வலியுறுத்தியது. அதற்கு இணங்க முதலில் மறுத்தபோதிலும், முடிவு தனக்குச் சாதகமாக இருக்கும் என்பது நிச்சயமானதும், வாக்கெடுப்புக்கு இந்தியப் பேரரசு இணங்கியது.

வாக்கெடுப்பின் முடிவு எவ்வாறு இருக்குமென்பதை, பிரெஞ்சுஏகாதிபத்தியமும்முன் கூட்டியே விளக்கமாகத் தெரிந்திருக்கிறது. மக்கள் விருப்பத்தை, மதித்து நடக்கும் போக்கு தனக்கும் உடன்பாடுதான் என்பதை உலகுக்குக் காட்டிக்கொள்ளும் நினைப்பை, முன்னரே தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு விஷயத்திற்கு, அவசியமில்லாத அரசியல் சட்டத்தைப் புகலாகக் கொண்டு, பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டது. அதுவுமல்லாமல் உருவான போட்டி சர்க்காரை ஒடுக்கி, தனது அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டிக்கொள்ளத் தவறிவிட்டதால் ஏற்பட்ட அவமானத்தை மறைத்துக்கொள்ளும் நினைப்பும், வேண்டா வெறுப்பாக வாக்கெடுப்பை முன் தள்ள வேண்டிய கட்டாயமும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு உண்டாயிற்று. வாக்கெடுப்பை மதித்து நடக்க வேண்டிய நிலை இரு அரசுகளுக்கும் ஏற்பட்டதற்கு எதுகாரணமாக இருந்தபோதிலும், முடிவு, விடுதலை வேட்கையினர் மகிழ்ந்து வரவேற்கக்கூடியதாக இருந்துவிட்டது. இம்முடிவை உண்டாக்கிய பிரெஞ்சிந்திய பொதுமக்கள் 'பிரதிநிதி'களை நாம் பாராட்டுகிறோம்.

பிரெஞ்சிந்தியா இந்தியாவுடன் இணைய வேண்டும் என வாக்களித்து, அப்பகுதியை விட்டு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை வெளியேற்றிய பொதுமக்கள் 'பிரதிநிதிகள்', உண்மையிலேயே பிரெஞ்சிந்திய மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்தானா என்பது கருதத்தக்கது. பொதுமக்களில் பெரும்பான்மையினர் வாக்குகளை அந்தப் 'பிரதிநிதிகள்' பெற்றிருக்கிறவர்கள்தானா என்பதும் சிந்திக்கத்தக்கது.

பிரெஞ்சிந்தியா பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்குள்ளானதிலிருந்து நடைபெற்ற எந்தத் தேர்தலும், நாம் அறிந்துள்ள தேர்தல் வகைப்படி நடைபெற்றது கிடையாது. தேர்தலில் கலந்து கொள்ளும் எவருக்காவது, தங்கள் வாக்குகளை அளிக்க சர்க்கார் வாக்காளர் பட்டியலில் உள்ள ஒரு வாக்காளராவது தேர்தல் சாவடியைக் கண்டதும் கிடையாது—உள்ளே நுழைந்ததும் கிடையாது. கொலைக்களமாக இல்லாமல் தேர்தல் சாவடியாக இருந்தால் அல்லவா, வாக்காளர்கள் அங்கு வந்து தங்களுக்கு விருப்பமான அபேட்சகர்களுக்கு ஆதரவு தந்து, குறிப்பிட்ட அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்? உயிரையும்; உடலையும் குலைத்துக் கொள்ள எந்த வாக்காளருக்குத்தான் துணிவு ஏற்படும்?

பிரெஞ்சிந்தியாவில் தேர்தல் நடைபெற்றது என்பதும் அதில் சிலரை தங்கள் 'பிரதிநிதி'களாகப் பொதுமக்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்பதும் முதல்தரமான மோசடியாகும். இந்த மோசடி வித்தையை, தாம் விளக்கமாகத் தெரிந்து கொண்டிருந்த காரணத்தினால்தான், பிரெஞ்சிந்திய இணைப்புக்கு, வாக்கெடுப்பை ஒரு கருவியாகக் கொள்ள, இந்தியப் பேரரசு துவக்கத்திலிருந்தே ஒப்புக் கொள்ள மறுத்தது. எத்தகைய பித்தலாட்டத்தையும் செய்து தமக்குச் சாதகமானவர்களையே 'பிரதிநிதிகளாக' ஆக்கிக்கொள்ளும் முறையில், தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற திடநம்பிக்கையினால்தான், பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் வாக்கெடுப்பைப் பன்னிப் பன்னிப் பேசிக் கொண்டு இருந்தது.

இணைப்பை ஆதரித்த இந்த மகிமை பொருந்திய பொது மக்கள் 'பிரதிநிதிகள்,' பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு ஒத்து ஊதிக்கொண்டிருந்த வரையில், அவர்களுடைய பிரதிநிதித்துவத்தை கேலி செய்துவந்தது! அவர்களை ஏகாதிபத்தியக் கூலிகள் என்றும் ஏளனம் செய்து வந்தது!

அதே நேரத்தில், தங்களுக்குச் சாதகமாக இருந்த காரணத்தால் பொதுமக்கள் 'பிரதிநிதி'களான அந்த அறவழி வந்தவர்களை, அந்தரத்திற்கு உயர்த்திப் பேசிக்கொண்டிருந்தது பிரெஞ்சு ஏகாதிபத்தியம்! அவர்கள் ஏகாதிபத்திய சேவைக்கு மகிழ்ந்து, விருதுகள் வழங்கி வந்தன!

அந்தப் 'பிரதிநிதிகள்' போக்கில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டதும், அவர்களை நம்பத்தகாதவர்கள் எனக் கூறிக்கொண்டிருந்த இந்தியப் பேரரசு, அவர்களைத் தட்டிக் கொடுத்து, பாராட்டுரை வழங்கி, கட்டித் தழுவிக்கொண்டது! அதே போன்று, தமக்குப் பகைவர்களாகிவிட்டது கண்டு பதைபதைத்துப்போன பிரெஞ்சு ஏகாதிபத்தியமும், அவர்களைக் குறித்து முன்பொரு நாள் இந்தியப் பேரரசு கூறிய அடைமொழிகள் அனைத்தையும், அவர்கள் மீது வீசி எறிந்தது!

இந்தப் பொது மக்கள் 'பிரதிநிதிகள்' எந்த ஒரு அரசினுலாவது,' என்றென்றும் பாராட்டப்பட்டே வந்திருக்கிறார்கள். இந்தப் பாராட்டுச் சந்தடியில் பிரெஞ்சிந்திய மக்களின் குரல் கேட்கப்படவே இல்லை! இந்தியப் பேரரசும், பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் மக்களாட்சிக்குக் கொண்டிருக்கும் பொருளும், காட்டும் மதிப்பும் ஒத்தநிலையில்தான் இருக்கிறது என்பதை இரு அரசுகளின் செயலும் வலியுறுத்துகிறது!

ஆதிக்க வெறி பிடித்தவர்களின் செயலைக் கொண்டு மக்களாட்சி முறையை நிர்ணயிப்பது முடியாத காரியம். இரு அரசுகளின் போக்கும், மக்களாட்சியைப் புரிந்து கொள்ள முடியாத ஒரு பெரும் புதிராக அடித்துவிட்டது!

மார்ஷல் டிட்டோ

யூகோஸ்லாவியக் குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ, 1955 ஜனவரியில் இந்தியாவிற்கு வருகை தரக்கூடும் எனத் தெரிய வருகிறது.

அவரது வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென, இந்தியாவிற்கான யூகோஸ்லாவியத் தூதுவர் குறிப்பிட்டார். ஒரு ஐரோப்பிய நாட்டின் தலைவர் என்கிற முறையில் அவரது வருகைதான் இந்தியாவிற்கு முதலாவதாக இருக்கும். மேலும் யூகோவின் தலைவர் ஆசியாவிற்கு இப்போதுதான் முதன்முறையாக வருகிறார் என்றும் அந்தத் தூதுவர் குறிப்பிட்டாராம்.

பிரிட்டிஷ் வியாபாரிகளை - அமெரிக்கர் பயமுறுத்தினர்!

சீனவுடன் வியாபாரம் செய்யக் கூடாதாம்!

லண்டன், அக். 20—

"ஹாங்காங்கில் உள்ள பிரிட்டிஷ் வியாபாரிகள் சீனவுடன் குறிப்பிட்ட ஒருவகை வியாபாரம் செய்வதை நிறுத்தாவிடின், அந்த வியாபாரிகளின் டாலர் போக்குவரத்தையே நிலை நிறுத்தி விடுவதாக அமெரிக்கத் தூதுவர் பயமுறுத்தினர்,"

என்று, பிரிட்டனின் முன்னாள் தொழில் அமைச்சரான ஹாரால்டு வில்சன் குற்றம் சாட்டியுள்ளார் எனத் தெரிகிறது.

மேலும் அவர், அமெரிக்கத் தூதுவராலய அதிகாரிகள், பிரிட்டிஷ் வர்த்தக துறைமீது மோப்பம் பிடிப்பதாயும், வேவு பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் வியாபாரிகளின் இதர வியாபாரங்களைத்துண்டித்து விடுவதாகவும், அமெரிக்கர்கள் பயமுறுத்தியதாகத் தெரிகிறது என்றும் வில்சன் பிரிட்டிஷ் மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

"குற்றச்சாட்டு சரியல்ல!"

"பிரிட்டிஷ் மக்கள் சபையில், வில்சன், அமெரிக்கத் தூதுவர்கள்மீது சாட்டியுள்ள குற்றச்சாட்டு சரியானதல்ல; பிரிட்டிஷ் வியாபாரிகள் சீனவுடன் வியாபாரம் செய்வதை நிறுத்தாவிட்டால், அமெரிக்க டாலர் போக்குவரத்தைத் துண்டித்து விடுவோம் என நாங்கள் பிரிட்டிஷ் வியாபாரிகளைப் பயமுறுத்தியது கிடையாது,"

என்று அமெரிக்கத் தூதுவராலயம் கூறுகிறதாம்.

இலங்கையின் போக்கு

வெளியேற்றம் ஒருபுறம்! ஆதரவு மறுபுறம்!!

கொழும்பு, அக் 22—

இந்தியர் என்ற பெயரில் வேற்றுமை எதும் பாராது, போதிய காரணமின்றி குடி உரிமைக்கு மனுச் செய்துள்ளோர், மனுச் செய்து கொள்ளாதோர் அனைவருக்கும் இலங்கை அதிகாரிகள் வெளியேற்ற உத்தரவுகளை அனுப்பி வருகிறார்களாம்.

இதன் மூலம் குடிஉரிமை பெற மனுச் செய்து குடிஉரிமைப் பதிவு அதிகாரியின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஏராளமான தோழர்கள்வெளியேற்றப்படலாம் என்று இலங்கை ஜனநாயகக் காங்கிரசார் கருதுகின்றனர்.

இதற்கிடையில், இலங்கை வெளிநாட்டிலாகா அதிகாரிகள் சாதாரண காரணங்களைக் காட்டி குடி உரிமை மனுக்களை நிராகரிக்க வேண்டாம் என்று குடிஉரிமைப் பதிவு அதிகாரிகளுக்கு உத்தரவுகள் அனுப்பியுள்ளார்கள் என்று தெரிகிறது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி

ஐந்து மடங்கு அதிகமாகிறது!

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்க ஒப்புக்கொண்டிருந்த உதவியின் மதிப்பு இப்போது ஐந்து மடங்கு உயர்த்தப்பட்டிருக்கிறதாம்.

தற்போதைய ஏற்பாடுகளின்படி 22 மில்லியன் டாலர் அமெரிக்கா தந்து உதவுமென்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க உள் நாட்டிலாகா, பாகிஸ்தானுக்கு 105 மில்லியன் டாலர்கள் உதவி அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறது.

இந்த அறிவிப்பு நிச்சயமற்று காணப்பட்டாலும், உடனடியாக 55 மில்லியன் டாலர்கள் உதவி அளிக்கப்படுமென்று அமெரிக்க உள் நாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினார். இத்தொகை, பாகிஸ்தான் பிரதமர் முகமது அலியின் அமெரிக்க சுற்றுப் பயணத்திற்கு முன்னர் நிச்சயிக்கப்பட்டிருந்ததை விட இரண்டு மடங்காகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஐசனேவரின் போர் வெறி!

கம்யூனிஸ்டுகள் மீது வழக்கமான வசைமாரி!

ஆயுதப் பெருக்கமே சமாதானம் காண வழியாம்!

"நேசநாடுகளின் ஆயுத பலம் தான், யுத்தத்தைத் தடுக்கக் கூடிய பலம்வாய்ந்த சக்தியாகும்; அதை எதிர்க்க கம்யூனிஸத்தால் ஒருபோதும் முடியாது,"

என்று அமெரிக்க ஜனதிபதி ஐசனேவர் கூறியுள்ளார்.

நாடு முழுவதுக்குமாக ஆற்றிய டெலிவிஷன் ரேடியோ சொற்பொழிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

"நியாயத்தின் மீது நிற்கிற சமாதானத்திற்காக, நமது நாடு இடைவிடாது பணிபுரியும்; சமாதானத்திற்குப் பாடுபடுவதென்பது நமது கடமை மட்டுமல்ல—நமது தேசியக் கொள்கையும்கூட!

எல்லா மனிதர்களும் பாதுகாப்புடன் வாழ்கிற சுதந்திரத்தோடு கூடிய சமாதானம்—இந்த அடிப்படையில்தான் நமது வெளிநாட்டுக் கொள்கை அமைக்கப்பட்டுள்ளது.

சமாதானம் நிலவுவதைக் குலைப்பது மாஸ்கோவிலும், பீகிங்கிலும் உள்ளவர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கையே! மேலும், கம்யூனிஸ்டு தாக்குதல் நாளுக்கு நாள் விரிவடைந்து வருவதினால் உலக நெருக்கடி முற்றிக்கொண்டே வருகிறது.

நாடு நகரங்களையும் மக்களையும் மட்டுமின்றி, உண்மை, பாதுகாப்பு, விசுவாசம் இவைகளை அழிப்பதற்கும் அவர்கள் எந்த ஆயுதங்களையும் மிச்சம் வைப்பதில்லை.

எனவே, பலதரப்பட்ட அரசாங்க அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் விதவிதமான கொள்கைகளுக்கு நாம் ஆக்கம் தருவதின் மூலம், கம்யூனிஸ்டுகளைப் புகமுடியாது செய்து, சமாதான வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

நாளுக்கு நாள் ஆபத்துக்கள் மாறிமாறி வந்துகொண்டிருக்கிற இன்றைய நிலையில், அமெரிக்கா தனது இராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. யுத்த முறைகளில், மாற்றம் ஏற்படும்போது, நாமும், நமது இராணுவங்களை அதற்கொப்ப மாற்றிக்கொள்ளத்தானே வேண்டும்? அணுசக்தி சப்மரீன்கள் முதல் பலவகையான ஆயுதப் பெருக்கங்களையும், தற்காலத் தேவைக்கொப்பப் பெருக்கிக் கொள்ள வேண்டும்."

சௌராஷ்டிர காங்கிரஸ் மந்திரி கொள்ளைக்காரனுக்கு கவசமானாராம்!

கொலையிலும், கொள்ளையிலும் சம்பந்தப்பட்டிருக்கிறாராம்!

நூல் வெளியிட்டோர் மீது மந்திரியின் மானநஷ்ட வழக்கு?

"பூபத் அல்லது ரஸிக்லால்—இவர்களில் யார் பலசாலி?" என்ற புத்தகத்தில், சௌராஷ்டிர மாநிலத்தின் உள்நாட்டு மந்திரி ரஸிக்லால் பரீக் என்பவர், சௌராஷ்டிரத்தின் மிகப் பெரிய கொள்ளைக்காரனும், இப்போது பாகிஸ்தானில் பதுங்கிக் கிடப்பவனுமான பூபத் என்பவனுடன் நட்புறவு கொண்டிருந்தார்; 'போதாத்' என்ற இடத்தைச் சேர்ந்த ஹரிஜிபடேல் என்பவர் கொலை செய்யப்பட்டதில் மந்திரிக்கும் ஈடுபாடு உண்டு; பவநகர் தர்பார் பாங்கில் நடைபெற்ற பெரும் கொள்ளையில்கூட ரஸிக்லாலுக்குப் பங்கு உண்டு," என்று அப்புத்தகத்தின் ஆசிரியர் யெஷ்வந்த் பரீக் குற்றம் சாட்டியிருந்தார்.

1952ல் வெளியிடப்பட்ட அப்புத்தகம் தனக்கு அபகீர்த்தியைத் தேடித்தருவதாக இருப்பதாக ராஜ்கோட் நீதிமன்றத்தில் மந்திரி ரஸிக்லால் முறையிட்டார், புத்தக ஆசிரியரின் வேண்டுகோளின்படி, இந்த விசாரணை இப்போது பம்பாய் பிரதம மாகாண நீதிபதிமுன் நடைபெற இருக்கிறது.

பிரதம மாகாண நீதிபதி, புத்தகாசிரியர் மீது வழக்கொன்று பதிவு செய்துள்ளார்.

மந்திரி தனது வாக்குமூலத்தில், "நான் பூபத்தைப் பார்த்ததே இல்லை; சந்தித்ததும் இல்லை; பூபத் மீது கைது செய்யும் 'வாரண்ட்' பிறப்பித்திருந்தும், நான், போலீசார் பூபத்தைக் கைது செய்ய அனுமதிக்கவில்லை என்று கூறுவது தவறு" என்று கூறியுள்ளாராம்.

கழகச் செய்திகள்

சென்னை – கோடம்பாக்கம் தி. மு. கழகம்

20—10—54 புதன் இரவு 8-30 மணிக்கு 35-வட்டம் கோடம்பாக்கம் தி. மு. கழக கிளையின் செயற்குழுக் கூட்டம் கழகக் கொட்டகையில் நடந்தது. அவ்வமயம் பகுத்தறிவுக் கொவ்வாத விழா (பண்டிகை)வாகிய தீபாவளியைக் கொண்டாடுவது தவறு; அதனால் பணம்,நேரம் ஆகியவை வீண் என்பதை மக்களுக்கு விளக்க, தீபாவளியின் அடிப்படை புரட்டையும் ஆபாச கதையையும் சுவரொட்டி மூலம் விளக்குவதென்றும், கல்லக்குடி அறப்போராட்ட வெற்றி விழாக் கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

திருப்பத்தூர் (வ—ஆ.) தி. மு. கழகம்

13—10—54 இரவு 8 மணிக்கு நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கவிமணி தேசிக விநாயகம் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், மாவட்டக் கழகத் தேர்தலில் வெற்றி பெற்ற, தி. மு. கழக தோழர்கள், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அம்பில் தர்மலிங்கம்; ஏ. எல். சி. கிருஷ்ணசாமி ஆகியோருக்குப் பாராட்டு தலை தெரிவித்துக் கொண்டும், 31—10—54-ல் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை — சேதவத்தை (கிளை) தி. மு. கழகம்

10—10—54 மாலை 5 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் சேரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கழகக் கிளையின் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், 26—9—54ல் நடைபெற்ற இலங்கை தி. மு. கழகப் பொதுக் குழுவினர், நிர்வாகிகள் தேர்ந்தெடுத்ததைப் பாராட்டியும், அக்குழு நிறைவேற்றிய தீர்மானங்களை ஏற்றுக்கொண்டும், கவிமணி தேசிகவிநாயகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குடியேற்றம் தி. மு. கழகம்

17—10—54 மாலை 4 மணிக்கு, ராஜா தியேட்டரில், தோழர் வி. ஜி. சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: இரா. சாரங்கபாணி; துணைச் செயலாளர்: சே. மா. ரங்கசாமி; பொருளாளர்: கு. சி. பொன்னுசாமி. மாவட்டப் பிரதிநிதிகள் :—பா. துரையரசு, பொன்னரசு; நிர்வாகக் குழு உறுப்பினர்கள் :— தோழர்கள் வி. கு. சந்திரசேகரன், வி. ஜி. சீனிவாசன், பி. ஜி. ராஜன், கே. ஜி. எம். அண்ணாமலை, வி. கோபால், ஆ. க. திலகன், எம். ஜி. வேலாயுதம், ரகுபதி, வி. ராமலிங்கம், கே. முனுசாமி, எஸ். வேலுசாமி, தட்சணாமூர்த்தி.

சென்ற ஆண்டு வரவு - செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டது.

சாந்தனுபுரம் தி.மு. கழகம்

புதுக்கோட்டை, அக். 23—

17—10—54-ல் தோழர் மகேந்திரன் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் குடந்தை என். சி. பன்னீர்செல்வம் சொற்பொழிவாற்றிய பின், தோழர்கள் கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அம்பில்-தர்மலிங்கம் ஆகியோர் மாவட்டத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்குப் பாராட்டியும், கல்லக்குடி, தூத்துக்குடி சதி வழக்குகளை திரும்பிப் பெற்றுக்கொள்ளும்படி அரசியலாரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை—சென்னிமலை தி. மு. கழகம்

17—10—54ல் செயலாளர் ஏ. முருகேசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ஏ. முருகேசன்; துணைச் செயலாளர்: ஏ. கொழந்தசாமி; பொருட்காப்பாளர்: ச. சின்னுசாமி; மாவட்டப் பிரதிநிதி: க. சு. திருமலைசாமி; நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: கே. நாச்சிமுத்து, கே: ரத்தினம், இராவணன், கூத்தரசன், கே. அய்யாவு, எஸ். நடராசன், பி. சீத்தாராமன்; ஆர். சிவன்மலை, பி. பாலசுப்பிரமணியம், சி. எஸ். அலாவுதீன், ஏ. இராசகோபால், கே. எம். சுப்பிரமணியம், வி. கே. அங்கப்பன், எஸ். மாயூ, கே. எம். பி. பாலசுப்பிரமணியன். பின்னர், கழக உறுப்பினராகத் தோழர் ஏ. கொளந்தசாமியை சேர்த்துக்கொண்டும், கவிமணி தேசிகவிநாயகம், நகரக்கழக உறுப்பினராகப் பணியாற்றிய தோழர் எம். கிருஷ்ணன்மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு கையிருப்புத்தொகை ஒப்புக்கொள்ளப்பட்டது.

சாத்தூர் நகர தி. மு. க.

10—10—54 இரவு 7 மணியளவில் இந்நகர் ரயில்வே பீடர் ரோடிலுள்ள கழகப் பணி மனையில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: பி. பாலகிருஷ்ணன் ; துணைச் செயலாளர் : பா. காசிராசன் ; பொருளாளர் : பா. நடராசன் ; விளம்பர உறுப்பினர் : கலைச்செல்வன். செயற்குழு உறுப்பினர்கள் ; ஏ. செண்பகக் குட்டி, வி. டி. நடராசன், சி. டபிள்யூ. பொன்னையா, மூ. குருசாமி, வி. கே. சாமி, ஆர். பி. சன்யாட்சன், சின்னத் தம்பி, சோலையப்பன், க. நடராசன், எஸ். எஸ். பி. சண்முகநாதன், சுந்தரப்பன், அ. நடராசன், மூ. குருசாமி, எம். நடராசன், த. ஜெயராஜ், பா. அண்ணாமலைச்சாமி, சி. அண்ணாமலைச்சாமி.

* * *

17—10—54 இரவு 9-30 மணிக்கு, கழகப் பணி மனையில் தோழர் வி. டி. நடராசன் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், தலைவர் முன்னுரைக்குப் பின், ஆர். பி. சன்யாட்சன் புதிய நிர்வாகக் குழுவினரைப் பாராட்டியும், கழகத்தின் கட்டுப்பாடு, தோழர்கள் செயலாற்ற வேண்டிய முறை பற்றியும் பேசினார். பின்னர் தோழர்கள் கே. என். ராசன், சு. கலைச்செல்வன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

காங்கேயநல்லூர் தி. மு. க.

26—9—54 இரவு 9 மணிக்கு தோழர் அ. கருத்தோவியன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோழர் டி. வி. ராசாமணி, எம். முத்து, எஸ். வரதன் ஆகியோரை குழுவின் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டதுடன், தோழர் மு. முத்து துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், வருகிற பொங்கல் விழாவன்று, ஒரு வாசகசாலையை திறக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கீழப்பாவூர் தி. மு. கழகம்

5—10—54ல் நடைபெற்ற இவ்வூர் கழகச் செயற்குழு கூட்டத்தில், விரைவில் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், கழக 5-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திருமோகூரில் தி. மு. கழக அமைப்பு

மதுரை மாவட்டத்தை சேர்ந்த திருமோகூரில், தி. மு. கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ஊ. ம. கிருட்டிணன் ; துணைச் செயலாளர்: க. முனியாண்டி ; பொருளாளர் : இரா. மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்கள் : பே. வீராசாமி, பி. சோலைமலை, மு. அம்பலம், மு. வேணு. விரைவில் சிறப்புக் கூட்டம் ஒன்று நடத்துவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கொலாபா தி. மு. கழகம்

பம்பாய் - கொலாபா தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் 18—10—54-ல், கூபரேஜ் திடலில், செயலாளர் கே. கே. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. புத்தாண்டிற்கு கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : எஸ். கே. ராஜு; துணைச் செயலாளர் ; கே. எஸ். செகநாதன்; பொருளாளர் : ஆர். ஜி. ஜார்ஜ்; மாவட்டப் பிரதிநிதிகள் : கே. கே. ராமநாதன், சு. தங்கவேலன் ; தணிக்கையாளர் : எஸ். பி. பெருமாள் ; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுவலசை தி. மு. கழகம்

4—10—54 மாலை 4 மணிக்கு தோழர் எம். ஏ. தல்ஹான் தலைமையில் நடைபெற்ற கழக செயற்குழு கூட்டத்தில், வரவு-செலவுக் கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டபின், திரு. தமிழர் போராட்டத்தின்போது பட்டம் தாணு சர்க்கார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தை வன்மையாகக் கண்டித்தும், போராட்டத்தில் உயர்நீத்த தோழர்கட்கு வீரவணக்கம் செலுத்தியும், இலங்கை வாழ் தமிழரின் அவல நிலையைப் போக்கி உடனடி நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குன்னத்தூர் தி.மு. கழகம்

19—10—54-ல், தோழர் ஆர். நடராசன் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில், சி. டி. தண்டபாணி அவர்கள், திராவிட நாடு பிரிய வேண்டியதன் அவசியம் குறித்தும், கழக வளர்ச்சி பற்றியும் சொற்பொழிவாற்றினார். தோழர்கள் கே. என். நடராசன், கு. க. அய்யாவு ஆகியோரும் பேசினர்.

சென்னை–சூளை தி. மு. க. 4-ம் ஆண்டு விழா

17—10—54-ல் சூளை மாணிக்கம் செட்டி தெருவில் தோழர் இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற கழக 4ம் ஆண்டுவிழா பொதுக்கூட்டத்தில் அரசியல் நிலை பற்றிதோழர் ஏ.சி. வில்வம் பேசிய பின், தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி 'சமுதாயம்' என்பதுபற்றி விளக்கவுரையாற்றினார். பின்னர், தோழர் கன்னியப்பன் கழகத்தின் ஆண்டறிக்கை வாசித்தார்.

குகை—சேலம் தி. மு. க.

4—10—54-ல், தோழர் அர்த்தநாரி இல்லில், தோழர் கே. வி. கோபால் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :– ப. பத்மநாபன்-செயலாளர் ; இ. ரா. சுந்தரராசு-துணைச்செயலாளர் ; இ. ரா. வரதராசு-பொருளாளர் ; அ. சன்ராசு, சி. வி. நாதன்—நகர பிரதிநிதிகள் ; செயற் குழு உறுப்பினர்கள் : ஆர். வி. கோபால், எஸ். ஆர். அர்சுனன், இ. எஸ். ராசு, எம். எல். நாதன், இ. ரா. கிருட்டினராசு, டி. கிருட்ணசாமி, மா. கயலழகன், பெ. இலக்குமணன்.

சித்தமல்லியில் தி. மு. க. (கிளை) அமைப்பு

12—10—54ல், மன்னார்குடி தாலுக்கா சித்தமல்லியில் தோழர் ரா. பா. அருணாசலம் கடையில். தோழர் ந.தருமலிங்கம்தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.க கிளை அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: அ. மு. சண்முகம்; துணைச் செயலாளர்: ரா. பா. அருணாசலம்; பொருளாளர்: கோ. விசுவநாதன்; மாவட்டப் பிரதிநிதி: வீ. பெத்த பெருமாள். செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள் சு. சங்கரன், ஆ. ரெத்தினம், கிருஷ்ணசாமி, முகையதீன்பிச்சை, பா. பொதியப்பன்.

குன்னத்தூர் தி. மு. க.

3—10—54 பகல் 1-30 மணியளவில் தோழர் ஆர். நடராசன் தலைமையில் நடைபெற்ற கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில், கடந்த பொங்கல் விழா, கல்வித் திட்ட வெற்றி விழா, கழக ஆண்டு விழா பொதுக் கூட்டங்களின் வரவு—செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், கவிமணி தேசிகவிநாயகம் மறைவுக்கும், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் புதல்வன் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும், தோழர்கள் கு. நடேசன், எஸ். ஆறுமுகம், கே. எம். முத்து (பொருளாளர்) ஆகியோரின் விலகுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டும், தோழர் கே. என். சண்முகம் செயற்குழு உறுப்பினராகவும், தோழர் ஆர். திருமூர்த்தி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடம்பூர் தி. மு. கழகம்

17—10—54 மாலை 4-30 மணியளவுக்கு, இவ்வூர் கழகக் கட்டிடத்தில் தோழர் முத்துமாலை தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழக 6-வது ஆண்டுவிழாவை கழக முன்னணி வீரர்களைக் கொண்டு நடத்துவதெனவும், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனார் மகன் இராமு, கவிமணி தேசிகவிநாயகம் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், திரு—கொச்சி நாஞ்சில் பகுதியில் தாணு சர்க்கார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், அத்துப்பாக்கிப் பிரயோகம் பற்றி வெளி மாநில, அரசியல் பற்றற்றவர்களைக் கொண்டு விசாரித்து நீதி வழங்கக்கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கவுந்தப்பாடியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

9—10—54 மாலை 7 மணிக்கு கவுந்தப்பாடி பெரியார் மைதானத்தில், ஏ. வி. தவிசியப்பன் தலைமையில் நடைபெற்றக் கழகப் பொதுக் கூட்டத்தில், மாற்றுக் கட்சியினரின் தவறான பிரசாரத்தைக் கண்டித்து தோழர் அய்யாவு சொற்பொழிவாற்றினார்.

பின்னர் தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் மும்முனைப் போராட்டத்தை விளக்கியும், தி. மு. கழகத்தின் ஆக்க வேலைகளைக் குறித்தும் சொற்பொழிவாற்றினார். தோழர்கள் கா. மா. செஞ்சிராயன், க. பா. இரங்கசாமியும் பேசினர்.

மூவலூரில் கழகத் துவக்க விழா பொதுக் கூட்டம்

10—10—54 மாலை 6 மணிக்கு, மாயூரம் வட்டம், மூவலூர் தி. மு கழகத்தின் துவக்க விழா பொதுக் கூட்டம் தோழர் சித்தக்காடு ராமையா தலைமையில் சுந்தரம் பூங்காவிற்கு அருகில் நடைபெற்றது. தோழியர் செல்வக்கண்ணம்மாள், தோழர்கள் என். கிட்டப்பா, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் தி. மு. கழகத்தின் சமுதாய—பொருளாதார—அரசியல் கொள்கைகள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

பொள்ளாச்சி தி. மு. கழக பொதுக்கூட்டம்

16—16—54 இரவு 8 மணிக்கு நகர தி. மு. கழகச் சார்பில், ராஜா தியேட்டரில் தோழர் எம். ஜி. சீதரன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வால்பாறை தொகுதித் தேர்தலில் கழக ஆதரவு பெற்று சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற தோழர் பி. ராசமாணிக்கத்தைப் பாராட்டியும், கம்யூனிஸ்டுகளின் போக்கைக் கண்டித்தும் தோழர்கள் கோவைச் செழியனும், சிற்றுளி சுப்பிரமணியமும் பேசிய பின், தோழர் கண்ணதாசன் "தற்கால அரசியலும் தி. மு. க. வும்" என்பதுபற்றியும், மாற்றுக் கட்சியினர் தி. மு. க. பற்றிச் செய்துவரும் பொய்ப் பிரச்சாரங்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினார். பல கழகங்கள் சார்பிலும், பீடி தொழிலாளர்கள் சார்பிலும் தோழர்களுக்கு மலர்மாலைகளும், குள்ளக்காபாளையம் தி. மு. கழகச் சார்பில் தோழர் கண்ணதாசனுக்கு கைத்தறித் துண்டும் அணிவிக்கப்பட்டது.

தேரிழந்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

13—10—54-ல் மாயூரம் வட்டம் தேரிழந்தூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சௌந்தரராசன், சி. பி. சிற்றரசு, எஸ். எஸ். ராசேந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் கிட்டப்பா தமது தலைமையுரையில், கவர்னரின் சம்பளம் குறைக்கப்பட வேண்டியதின் அவசியத்தைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டினார்.

தோழர் சிற்றரசு பேசுகையில் கம்பனால் இந்த நாட்டிலே ஆரியம் ஆல்போல் தழைத்து வளருவதைக் குறிப்பிட்டும், தி. மு. கழகம், கம்பனின் காவியத்தைக் கண்டிக்காது அதிலே புகுத்தப்பட்டுள்ள நச்சுக் கொள்கைகளைத்தான் கண்டிக்கிறது என்பதை விளக்கியும் பேசினார். அடுத்துப் பேசிய தோழர் நடிகர் ராசேந்திரன், கலை பற்றிக் குறிப்பிடுகையில், கலை கலைக்காகவே இருந்த நிலையைமாற்றி அது மக்களுக்காகவே இருகக வேண்டும் என்று கொண்டுவந்தது நமது இயக்கம் ஒன்றுதான் என்று குறிப்பிட்டார்.

மேல்பட்டாம்பாக்கத்தில் தி. மு. க. பொதுக்கூட்டம்

10—10—54-ல், இவ்வூர் கழகச் சார்பில், தோழர் என். வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் கே. ஆர். சபாபதி, சி. இளவழகன் ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன், சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் ஊழல்களின் காரணமாகவே நாம் தாழ்ந்துகிடக்கின்றோம் என்பதைச் சுட்டி, இந்த நிலையைப் போக்க திராவிட நாட்டை நாம் அடைவதுதான் வழி என்பதையும் விளக்கி சொற்பொழிவாற்றினார்.

தொண்டங்குறிச்சியில் தி.மு.க. கிளை துவக்க விழா

விருத்தாசலம் வட்டம் தொண்டங்குறிச்சியில், தி. மு. கழகம் துவக்கப்பட்டபோது தோழர்கள் சி. முனுசாமி, சாமிநாதன் ஆகியோர், கழகம் துவக்கப்பட வேண்டியதின் அவசியம் பற்றி பேசினர். பின்னர் நிர்வாகக்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: பி. முத்துக்கண்ணன் ; துணைச் செயலாளர்: மு. கருப்பையா ; பொருளாளர் : பி. சின்னசாமி ; விளம்பர உறுப்பினர்: வி. குருசாமி. மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குறிப்பு : விழா நடைபெற்ற நாள் குறிப்பிடப்படவில்லை.

பன்மொழிப் புலவர் க. அப்பாதுரை தலைமையில்

வ.உ.சி. மன்ற 6-வது ஆண்டு விழா

சென்னை, அக். 25—

நேற்று சென்னை சேத்துப்பட்டு ஆரிங்டன் ரோடிலுள்ள வ. உ. சி. மன்றத்தின் 6-வது ஆண்டு விழா வின்போது தோழர்கள் கா. அப்பாதுரை, நாஞ்சில் கி. மனோகரன், கருணாநிதி ஆகியோர் பேசினர்.

இடிந்து பாழடைந்து கிடந்த ஒரு கோயிலைப் புதுப்பித்து, இருள் சூழ்ந்து ஒளியற்றுக் கிடந்த அந்தக் கோயிலிலே அறிவொளி வீசும் வ. உ. சி. கழகத்தை நிறுவ ஆக்கமும், ஊக்கமும் காட்டிப் பேருதவி செய்த தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுடைய படத்தைத்திறந்துவைத்து தோழர் கா. அப்பாதுரை பேசுகையில், தோழர் நெடுஞ்செழியனுடைய தனிப்பெருங் குணங்களையும், ஆற்றலையும் எடுத்துக்காட்டினர்.

அடுத்து தோழர் மனோகரன் பேசுகையில், தமிழ் நாட்டிலே இன்றைய நாளில் காணக்கிடக்கும் சமுதாய ஊழல்களைச் சுட்டிக் காட்டினர்.

மேனாடுகளிலே, மக்கள், கடந்த சில நூற்றாண்டுகளாக விஞ்ஞானத் துறையிலே, கல்வித் துறையிலே, அரசியல் துறையிலே முன்னேற்றம் காணுவதற்குப் பாடுபடும் நேரத்தில்தான், இந்நாட்டு மக்களில் பலர் 'ஈசன் உண்டா? ஈசனைக் கண்டதுண்டா? என்ற கேள்விகளை—மக்களை சாக்கடைகளுக்கு இழுத்துச் செல்லும் கேள்விகளை எழுப்பி, பஜனை மடங்களிலும், பந்தல் மேடைகளிலும் பாராயணம் செய்து வருகிறார்கள். இந்தச் சுற்றுப் புறங்களில் இருக்கும் சிறுவர்கள் கல்வி கற்க துடிதுடிக்கின்றார்கள்-பெற்றோர்களும் ஆவல் கொள்கிறார்கள்; ஆனால், பள்ளியில்லை; அதே நேரத்திலே பக்கத்திலே பஜனை மடங்கள் ஏராளம்; பாராயணப் பாகவதங்கள் ஏராளம்; ஆகவே, இவைகளை யெல்லாம் களைந்துவிட்டு மக்களுக்கு அறிவைப் பெருக்கும் வகையில்—வாழ்க்கைத்தரம் உயரும் வகையில்—நாம் ஈடுபட வேண்டும்" என்று குறிப்பிட்டுவிட்டு, தி. மு. கழகத்தின் கொள்கைகளை ஏற்று நடைபெற்று வரும் வ. உ. சி. மன்றத்தாரையும் பாராட்டிப் பேசினர்.

அடுத்துத் தோழர் கருணாநிதி அவர்கள் பேசுகையில், "உலகத்தையே சுருட்டிப் பாயாக்கிக் கொண்டு கடலில் ஒளிந்து மறைந்த நரகாசுரன் என்னும் அசுரனை, தேவர்களின் முறையீட்டிற் கிணங்க, திருமால் வராகவதாரம் (பன்றி) எடுத்து வந்து, அவனைக் கொன்று, உலகத்தை மீட்டதாகக் கூறப்படும் நாளைத்தான் தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். இந்தப் பண்டிகைக்காகச் சொல்லப்படுகிற கதையிலே பகுத்தறிவுக்குப் பொருந்தக் கூடியது ஏதாவது இருக்கிறதா? உலகத்தையே பாயாகச் சுற்றிவிட்ட நரகாசுரன், எப்படி கடலுக்குள் மறைய முடியும்? கடலுக்குள்ளே கிடந்த அசுரனை அழிக்கக் கடவுள் பன்றி அவதாரம் எடுப்பதா? இவைகளெல்லாம் பகுத்தறிவுக்குப் பொருந்தாத—பாமரரை ஏமாற்ற கட்டிவிட்ட கதைகள்; இந்தக் கதைகளிலே தெய்வீகம் என்ற ஒன்றைப் புகுத்தி, தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்கள—ஆரிய அந்தணர்கள்," என்று குறிப்பிட்டு, தற்கால அரசியலில் காணப்படும் ஊழல்களை விளக்கினர்.

கூட்டத் தலைவர் அவர்களால், சேத்துப்பட்டு வாசியான பெரியார் முருகேசனர் அவர்களின் பொது நலத் தொண்டுகளைக் குறிப்பிட்டு, அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவரது உருவப்படமும் திறந்துவைக்கப்பட்டது. கழகத்தின் 6-வது ஆண்டறிக்கையும் வாசிக்கப்பட்டது.

கிராமங்களுக்கு மின்சார வசதி!

கிராம மின்சார திட்டக் குழு, கிராமங்கள், சிறிய நகரங்கள் ஆகியவற்றிற்கு மின்சார வசதி செய்து கொடுக்கவிருக்கும் திட்டங்களுக்காக 13 மாநிலங்களுக்கு மொத்தம் ரூ. 78 கோடியே 24 லட்சம் அளித்துள்ளதாம்.

கிராம மின்சாரத் திட்டத்திற்கு உதவி பெறும் 5 மாநிலங்கள் உட்பட 11 மாநிலங்களுக்கு ரூ. 8-கோடியே 89 லட்சம் கடன் உதவியளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

தொழிற் பெருக்கம்: இங்கல்ல-அங்கு!

கான்பூர், அக். 25—

நாட்டில் அதிகரித்துக் கொண்டே வரும் ரசாயன உரத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய, சிந்திரி தொழிற்சாலை போன்று வேறு மூன்று தொழிற்சாலைகளை நிறுவ மத்திய சர்க்கார் உத்தேசித்துள்ளதாக மத்திய உணவு, விவசாய அமைச்சர் ரபி அகமத் கித்வாய் தெரிவித்துள்ளார்.

கழகக் கூட்டம்

பட்டாபிராம்

தி. மு. கழக முதலாண்டு விழா

ரயிலடிக்கு அருகாமையில்

27—10—54 மாலை 5 மணிக்கு

தலைவர்: எஸ். எஸ். தென்னரசு

பேசுவோர்:

என். வி. நடராசன்

அ. பொன்னம்பலனார்

கண்ணதாசன்

இசை: நாகூர் அனீபா

குறள் நெறி விழா— நான்காம் நாள்

சென்னை நுங்கம்பாக்கம் அவனியூச் சாலை எதிர் திடலில், குறள் நெறி விழா 26—10—54 மாலை 5 மணிக்கு, தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், பி. பாலசுப்பிரமணியம், தோழியர் அருண்மொழி, மற்றும் பலர் பேசுவர். இரவு 10 மணிக்கு 'கணைக்காலிரும்பொறை' ஓரங்க நாடகம் நடைபெறும்.

இரத்த அழுத்தம் - புதிய மருந்து!

இரத்த அழுத்தத்திற்கு நிவாரணியாக, அமெரிக்க டாக்டர்கள் 'ஸ்டெரோல்ஸ்' எனும் பெயருள்ள புதியதொரு மருந்தொன்றைக் கண்டு பிடித்துள்ளனராம். 'சோயா பீன்ஸ்' செடியிலிருந்தும், மரக் குழம்பிலிருந்தும் (மரக் கூழ்) அது தயாரிக்கப்படும் என்று தெரிகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது

நாடெங்கும் நெருக்கடி நிலைமை பிரகடனம்

முகமது அலி தலைமையில் புதிய மந்திரி சபை பதவி ஏற்றது

மேற்கு வங்க பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பாகிஸ்தானின் அரசியலில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை இப்போது முற்றிவிட்டது. பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடைபெற பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் உத்திரவிட்டிருக்கிறார். தேர்தல் நடைபெறும் வரை முகமது அலியின் தலைமையில் திருத்தி அமைக்கப்பட்ட புதிய மந்திரி சபை பாகிஸ்தானின் நிர்வாகத்தை நடத்தும் என்று தெரிகிறது.

சென்ற பொதுத் தேர்தலில் லீகை தோற்கடித்த மேற்கு வங்க ஐக்கிய முன்னணியினர் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டதை வரவேற்றுள்ளனர். மேற்கு வங்க லீகினர், 'நாகரீக உலகின் முன்னிலையில் பாகிஸ்தானின் மதிப்பு மிகவும் குறைந்து போகும்,' என்று கருதுவதுடன், கவர்னர்-ஜெனரலின் செய்கையைக் கண்டித்துள்ளனர்.

★

பாகிஸ்தான் முழுமையும் நெருக்கடி நிலைமையை கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது பிரகடனம் செய்துள்ளார். பாகிஸ்தான் உருவாகியதுமுதல் அதன் அதிகாரம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு, அரசியல் நிர்ணய சபையாகவும், பாராளுமன்றமாகவும் ஏழாண்டுகளாக இயங்கி வருகின்ற பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது கலைத்து உத்திரவிட்டிருக்கிறார். புதிய அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் சீக்கிரமே நடைபெறுமென்றும், அதுவரையில் திருத்தி அமைக்கப்பட்ட மந்திரி சபை ஒன்று பாகிஸ்தானின் நிர்வாகத்தை நடத்தி வரும் என்றும் கவர்னர்-ஜெனரல் தனது உத்திரவில் கூறியுள்ளார்.

"தற்போதுள்ள அரசியல் நிர்ணய சபை மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதென்றும், இனிமேல் அது நீடித்துப் பணியாற்ற முடியாது," என்றும் குலாம் முகமது தனது உத்திரவில் கூறியுள்ளார்.

வானொலியில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, "உள்ளுக்குள்ளேயே குழப்பம் நிறைந்ததாக விளங்கிவரும் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையிடம் பாகிஸ்தானின் பொறுப்பை இனி, தொடர்ந்து விட்டுவைக்க முடியாது" என்று கூறினர்.

பாகிஸ்தானுக்கு இராணுவ, பொருளாதார உதவி பெறுவது பற்றி அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் முகமது அலி அவசரமாகத் தாய்நாடு திரும்பியது நினைவிருக்கலாம். அரசியல் நிர்ணய சபையைக் கலைத்து உத்திரவு வெளியாகுமுன்னர், முகமது அலி, குலாம் முகமதுடன் மூன்று மணி நேரம் ஆலோசனை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

உத்திரவு வெளியாவதற்கு 4 மணி நேரத்திற்கு முன்னர், அரசியல் நிர்ணய சபையில் உள்ள கிழக்கு பாகிஸ்தான் உறுப்பினர்கள் 'புரட்சி' ஒன்று ஏற்படப் போவதாக வெளிப்படையாகவே கூறினர்களாம்.

இன்று மாலை 6 மணிக்கு பாகிஸ்தான் புதிய மந்திரி சபை பதவியேற்றது. புதிய மந்திரி சபைக்கு முகமது அலியே தலைவராக இருக்கிறார்.

எட்டு பேர் கொண்ட புதிய மந்திரி சபையில், கலைக்கப்பட்ட மந்திரி சபையிலிருந்த முகமது அலி, சௌத்திரி முகமது, கியாசுதீன் பாதன், டாக்டர் மாலிக் ஆகியோர் உள்ளனர்.

லண்டனில் பாகிஸ்தான் தூதுவராக இருந்த ஏ. எஸ். இஸ்பகானி, கிழக்குவங்க கவர்னரான ஜெனரல் மிர்ஜா, பாக். சேனதிபதி அயூப் கான், மீர் குலம் அலி தால்பூர் ஆகிய நால்வரும் புதிதாக மந்திரி சபையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மீண்டும் நான்கு பேர் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளப்படு வார்கள் என்று தெரிகிறது.

புதிதாக அரசியல் நிர்ணய சபைக்கு நடைபெறும் தேர்தல், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுமா அல்லது மறைமுகமாகவே தேர்ந்தெடுக்கப்படுமா என்பது தெரியவில்லை.

"நாட்டின் தலையாய அதிகாரம் மக்களிடையே உள்ளது; அவர்கள் தங்களின் பிரதிநிதிகள் மூலம் அரசியல் பிரச்சினைகளை இறுதியாக முடிவு செய்வார்கள்; நமது நாட்டின் பாதுகாப்பும், நிலையான சர்க்காரும், மாகாண, மற்ற பிரச்சினைகளைவிட முக்கியத்துவம் வாய்ந்தது; தேசியத்தின் முன்னர் அவைகள் சாதாரணமானவைகளே,"

என்று, கவர்னர்-ஜெனரல் தனது உத்திரவில் கூறியுள்ளார்.

இதே கருத்தை முகமது அலி; தனது வானொலிப் பேச்சில் வற்புறுத்தியுள்ளார்.

பாகிஸ்தானின் நெருக்கடி நிலைமைப் பிரகடனம் பற்றி, அரசியல் வட்டாரங்களின் கருத்து மாறுபடுகிறது.

அரசியல் நிர்ணய சபையைக் கலைக்க கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் இல்லை என்றும், அது தன்னைத் தானே கலைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர்.

எல்லை மாநில முதல் அமைச்சர் ரஷீதும், பஞ்சாப் மாநில முதல் அமைச்சர் நூன் ஆகியோரும் இதை வரவேற்றிருக்கின்றனர்.

நெருக்கடி நிலைமைகள் பற்றிய செய்திகள் அனைத்தும்—கார்ட்டூன் உள்பட—முன் கூட்டி தணிக்கை செய்யப்பட்ட பின்னர் தான் வெளியிடப்பட வேண்டுமென்று கராச்சி மாவட்ட நீதிபதி உத்திரவிட்டிருக்கிறார்.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை அமெரிக்க அதிபர்களிடையே மலைவை உண்டுபண்ணியதாகத் தெரிகிறது.

★

மேற்கு வங்க முக்கிய முன்னணித் தலைவர்கள், அரசியல் நிர்ணய சபைத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டதை வரவேற்றுள்ளனர்.

மேற்கு வங்க லீக் செயலாளர்; "உலகின்முன்னர் பாகிஸ்தானின் மதிப்பு குறையுமென்றும், நாம் எவ்வளவுதான் கூறியபோதிலும், பாகிஸ்தானியர்கள் சட்டத்திற்கும், அரசியல் அமைப்புக்கும் மரியாதை செய்யவில்லை என்று உலகம் நினைக்கும்" என்றும் கூறியுள்ளார்.

ஈரானில் மேலும் பலர் கைது!

தெஹ்ரான், அக். 25—

ஈரானின் இராணுவ அதிகாரிகளில் மேலும் 30 பேர்கள் கம்யூனிஸ்டுகள் எனச் சந்தேகிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை இப்படிக் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை சுமார் 600 ஆகும்.

இன்னும் தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று கைது செய்யப்பட்ட 30 பேர்களில் 10 பேர்கள் உயர்தர அதிகாரிகள் என்றும் மற்றைய 20 பேரும், இராணுவக் கழக அங்கத்தினர்கள் எனவும் தெரியவருகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: - சி. என். அண்ணாதுரை, எம். ஏ.